# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.139/2025

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தியாகராஜன் | Father's Name | : | சாந்தாராமன் |
| Village | : | திருவாரூர் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 59 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 12th day of February 2026.**

**(A1 to A3, A5 are present. A4 absent. For A4 petition U/s. 355 BNSS is filed and allowed).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மாவட்ட குற்ற பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.10.2023 அன்று நான், ஆய்வாளர் ஜெகதீஷ்வரன், சிறப்பு உதவி ஆய்வாளர் நாகராஜன், காவலர் ஜானி ரஞ்சித் ஆகியோரும் ரோந்து பணியிலிருந்தபோது அதிகாலை 6.00 மணியளவில் திருவாரூர் மடப்புரம் சுடுகாடு அருகே சென்றபோது கிடைத்த தகவலின் அடிப்படையில் 5 நபர்கள் சுடுகாட்டிற்குள் வட்டமாக உட்கார்ந்து

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.12 17:01:46 +0530

பேசிக் கொண்டிருந்தார்கள். தீபாவளிக்கு துணி எடுப்பதற்காகவும் ஆடம்பர செலவு மற்றும் மது அருந்துவதற்கும் பணம் தேவைப்படுவதால் அவ்வழியாக வாக்கிங் வரும் பெண்களிடம் நகையை பறித்து ஆடம்பர செலவு செய்ய அடையாளம் தெரியாதவாறு அவர்கள் 5 பேரும் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களை போலீஸ் பார்ட்டியுடன் ஆய்வாளரும் மடக்கி பிடிக்க முயன்றபோது அதில் 3 பேர் ராம்பிரசாத், பிரபாகரன், நிஷாம் என சொன்னார்கள். மற்ற இருவர் ஓடிவிட்டார்கள். அந்த 3 பேரையும் சம்பவ இடத்திலேயே கைது செய்தோம். ஓடியவர்களை பற்றி இவர்களிடம் விசாரிக்க கங்கா (எ) கங்காதரன் மற்றும் தொப்பை விக்னேஷ் என சொன்னார்கள். பின்னர் சம்பவ இடத்தில் ராம்பிரசாத் என்பவர் சாட்சிகள் வள்ளல், ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை ஆய்வாளர் பதிவுசெய்தார். எதிரிகளிடமிருந்து இரும்பு கம்பிகள் 2, மர உருட்டு கட்டைகள் 2, மங்கி குல்லாக்கள் 5 ஆகியவற்றை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். பின் எதிரிகள் மற்றும் தடயத்துடன் காவல் நிலையம் வந்து முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:01:53 +0530

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரர், வழக்கு பதிவு செய்தவர், விசாரணை அதிகாரி அனைத்தும் என்னுடைய உயரதிகாரி காவல் ஆய்வாளர் என்றால் சரி. மடப்புரம் தெட்சிணாமூர்த்தி மடத்திலிருந்து விளமல் கல்லுபாலம் வரை சுடுகாடுகள் உள்ளன என்றால் சரி. சுடுகாட்டிற்கு அருகிலேயே 10 மீட்டர் தொலைவில் வீடுகள் உள்ளன என்றால் 500 மீட்டர் தொலைவில் வீடு உள்ளது. நான் சொல்வதுபோல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை எனவும் எதிரிகளை அந்த இடத்தில் பார்க்கவில்லை எனவும் எதிரிகளிடமிருந்து எந்த தடய பொருளும் கைப்பற்றப்படவில்லை எனவும் காவல் ஆய்வாளரால் புள்ளி விபர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:02:00 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.139/2025

**Deposition of Witness for Prosecution PW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜெகதீஷ்வரன் | Father's Name | : | பரமசிவம் |
| Village | : | தஞ்சாவூர் | Taluk | : | தஞ்சாவூர் |
| Calling | : | | Age | : | 50 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 12th day of February 2026.**

**(A1 to A3, A5 are present. A4 absent. For A4 petition U/s. 355 BNSS is filed and allowed).**

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் அலகு குடிமை பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.10.2023 அன்று அதிகாலை சுமார் 5.00 மணிக்கு திருவாரூர் நகர காவல் நிலைய ஆய்வாளராகிய நான், உதவி ஆய்வாளர் தியாகராஜன், சிறப்பு உதவி ஆய்வாளர் நாகராஜன், முதல்நிலை காவலர் 1417 ஜானிரஞ்சித் ஆகியோருடன் திருவாரூர் நகர எல்லைக்குட்பட்ட

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:02:09 +0530

நெய்விளக்கு தோப்பு, காட்டுகார தெரு மற்றும் விளமல் ஆகிய பகுதிகளில் இரவு ரோந்து பணி செய்துவரும்போது அதிகாலையில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி 6.00 மணிக்கு திருவாரூர் மடப்புரம் சுடுகாடு அருகில் பார்டி சகிதம் கண்காணித்தபோது அங்குள்ள சுடுகாட்டில் 5 நபர்கள் யாருக்கும் தெரியாமல் வட்டமாக கூடி ஊட்கார்ந்துகொண்டு தீபாவளிக்கு துணிமணி எடுக்கவும் ஆடம்பர செலவுக்கு பணம் தேவைப்படும் என்றும் தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்ததை மெதுவாக அருகில் சென்று கவனித்தபோது அவர்களுக்கு குடிப்பதற்கும் செலவு செய்யவும் பணம் இல்லை அதனால் அதிகாலை வேலையில் அதிகமாக ஆள் நடமாட்டமில்லாத நேரத்தில் தங்களை அடையாளம் கண்டுபிடிக்க முடியாத வகையில் தலையில் மங்கி குல்லாவை மாட்டிக்கொண்டு கூட்டாக சென்று கொள்ளையடிக்கலாம் எனவும், அதிகாலை வாக்கிங் வரும் பெண்களிடம் ஆயுதத்தை காட்டியும் திடீரென்று தாக்கியும் அவர்களிடமிருந்து நகைகளை பிடுங்கலாம் எனவும் திட்டம் போட்டு தயார் நிலையில் இருந்தவர்களை போலீஸாராகிய நாங்கள் அவர்களை சுற்றி வளைத்து பிடிக்க முற்படும்போது சுடுகாட்டு பகுதியை ஒட்டியுள்ள ஓடம்போக்கி ஆற்றில் அனைவரும் குதித்து தப்பியோட முயன்றவர்களை சுற்றி வளைத்து 3 நபர்களை பிடித்தும் மற்ற 2

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:02:15 +0530

நபர்கள் ஆற்றின் மறுபக்கம் தஞ்சை சாலையில் ஏறி ஓடி மறைந்து விட்டனர். சுற்றி வளைத்து பிடித்த 3 நபர்களை விாரிக்க அவர்களின் பெயர், விலாசத்தை முன்னுக்கு பின் முரணாக கூறி இறுதியாக தங்களின் பெயர் ராம்பிரசாத், பிரபாகரன், நிஜாம் (எ) முஹமது அலி என சொன்னவர்களை சம்பவ இடத்திலேயே கைதுக்கான குற்ற காரணம் கூறி அதிகாலை 6.00 மணிக்கு கைது செய்தும், தப்பி சென்ற எதிரிகளை பற்றி விசாரித்ததில் ஒருவர் பெயர் கங்கா (எ) கங்காதரன் எனவும் மற்றொருவர் பெயர் தொப்பை விக்னேஷ் (எ) விக்னேஷ் எனவும் தெரியவந்தது. 6.15 மணியளவில் அவ்வழியாக வந்த சாட்சிகள் வள்ளல், ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் 1ம் எதிரி ராம்பிரசாத் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதில் நாங்கள் கொள்ளையடிக்க வைத்திருந்த ஆயுதங்களான 2 இரும்பு ராடுகளையும் 2 உருட்டு கட்டைகளையும் 5 மங்கி குல்லாக்களையும் எடுத்து உங்களிடம் ஆஜர் செய்கிறேன் என்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.4**. அதனடிப்படையில் 7.15 மணியளவில் எதிரிகளிடமிருந்த இரும்பு கம்பிகள் 2, மர உருட்டு கட்டைகள் 2, மங்கி குல்லாக்கள் 5 ஆகியவற்றை மேற்படி 2 சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.5**. மேற்படி அயிட்டங்கள் **சா.பொ.1 முதல் சா.பொ.4** சா.பொ.1 முதல் சா.பொ.1 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:02:21 +0530

படிவம் 91 **அ.சா.ஆ.6**. காலை 8.00 மணிக்கு மேற்படி 2 சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.7**. பின்னர் எதிரிகள் மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து எதிரிகள் மீது காலை 9.00 மணிக்கு திருவாரூர் நகர காவல் நிலைய கு.எண் 531/2023, இதச பிரிவு 399 ன் கீழ் முதல் தகவலறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.8**. 21.10.2023 அன்று சாட்சிகள் வள்ளல், ரவிச்சந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணை முடித்து 12.12.2023 அன்று எதிரிகள் மீது இதச பிரிவு 399 ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சி ரவிச்சந்திரன் சம்பவம் பற்றி கூறியதையே நான் வாக்குமூலமாக பதிவு செய்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் தனி நபர்கள் யாரையும் கண்ணுற்ற சாட்சியாகவோ கேள்விபட்ட சாட்சியாகவோ விசாரிக்கவில்லை என்றால் சரி. தனிநபர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரி. 21.10.2023 ல் தயார் செய்யப்பட்ட அ.சா.ஆ.5 நீதிமன்றத்திற்கு 25.10.2023 ல்தான் நீதிமன்றம் சென்றுள்ளது என்றால் தவறு 21.10.2023

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:02:26 +0530

அன்றே அனுப்பி வைக்கப்பட்டது. யாரிடமிருந்து தடய பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்று அ.சா.ஆ.5 ல் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. காவல் நிலையத்திற்கு கிடைக்கப்பட்ட இரகசிய தகவலை காவல் நிலைய பொது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளேனா என்றால் அது தேவையில்லை. நான் சொல்வதுபோல் சொன்ன தேதி, நேரத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை எனவும் சம்பவம் எதுவும் நடக்கவில்லை எனவும் எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை எனவும் எதிரிகளிடமிருந்து தடய பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை எனவும் சொன்னால் தவறு. புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யான வழக்கு பதிவுசெய்து அதற்கேற்றாற்போல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:02:34 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.